**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Natrinai: Field Semantics of Songs in Eyinathai Maganar Ilankeeranar

**K. Nalamaharajan[1*], A. Govindarajan[2],**

[1]*Full Time PhD Research Scholar, Center For Bharathidasan Studies, Bharathidasan University, Tiruchirappalli-24.*

[2]*Associate Professor, Center for Bharathidasan Studies, Bharathidasan University, Tiruchirappalli-24.*

*Email : govindarajan.a@bdu.ac.in, Ph No:9445293534.*

[*]Correspondence: nalanala1994maya@gmail.com, Tel: +918870316589

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** The oldest Literature in the Tamil language is the Sangam literature, which is classified as the most ancient literature. That literature is divided into Akam and Puram categories on the basis of disciplines. In internal literature, subject fields are used as references to convey information. That method is used for the concentration of ideas and for expression of ideas. Tolkappiyar defined the subject – fields. Furthermore, kinship, plants, animals, religion, rituals, costumes, clothing, dwelling, utensils, household words, politics, many kind of food, sculptures, architecture, communication, business, war, sports and entertainment, colors, measurements, festivals, rituals, medical methods, cosmetics, transportation, science, special names, nature, characteristics, etc., can be included in the subject field. Like singular words, compound words also have a subject relationship. By examining the semantic relationship of compound words, the semantic creation of compound words can also be revealed. This article examines the topic using this content strategy.

**Keywords:** *Tolkappaiyam, Agathinaiyiyal, uvamaviyal, Chollathikaram, Pinnathur A. Narayanasami Iyar, Avvai S. Duraisami pillai.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Kalanjiyam International Journal of Tamil Studies* *E-ISSN 2456-5148*
Volume 4 | Issue 05, February 2026

# நற்றிணை: எயினந்தை மகனார் இளங்கீரனார் பாடல்களில் பொருட்புலப்பாடு

[1]**கா.நளமகராஜன்,** முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24.

[2]**முனைவர் அ.கோவிந்தராஜன்**, நெறியாளர், இணைப்பேராசிரியர், பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24.

**ஆய்வுச்சுருக்கம்**

மூத்த மொழியாம் நம் தமிழ் மொழியில் மிகத் தொன்மையான இலக்கியமாக வகைப்படுத்தப்படுவது சங்க இலக்கியமாகும். இவ்விலக்கியம் அகம் புறம் என இரு ஒழுக்கங்களின் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது. அக இலக்கியங்களில் குறிப்புப் பொருளாக செய்திகளைக் குறிக்க பொருட்புலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவ்வுத்திமுறை கருத்துச் செறிவிற்காகவும் கருத்துப் புலப்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. தொல்காப்பியர் பொருட்புலத்தை அகத்திணையியலுள் வரையறுக்கிறார். உறவுமுறை, தாவரங்கள், விலங்குகள், மதம், சடங்குகள், அணிகலன்கள், ஆடை, குடியிருப்பு, பாத்திரம், வீட்டுச் சொற்கள், அரசியல், உணவுவகைகள், சிற்பங்கள், கட்டிடக்கலைகள், செய்தித் தொடர்பு, வணிகம், போர்ச் செய்திகள், விளையாட்டுப் பொழுதுபோக்குகள், நிறங்கள், அளவைகள், விழாக்கள், சடங்குகள் மருத்துவமுறைகள், ஒப்பனைகள், போக்குவரத்துச் சாதனங்கள், அறிவியல், சிறப்புப் பெயர்கள், ஐம்பூதங்கள், பண்பு நலன்கள் முதலியவற்றை பொருட்புலத்துள் அடக்கலாம். தனிச்சொற்கள் போன்று கூட்டுச் சொற்களும் பொருட்புல உறவைப் பெறுகின்றன. கூட்டுச் சொற்களின் பொருட்புல உறவை ஆராய்வதன் மூலம் கூட்டுச் சொற்களின் மீச்சொல், உட்சொல் உறவினையும் பொருட்புல படைப்பாக்கத்தையும் வெளிக்காட்ட இயலும். இப்பொருட்புல உத்தியைக் கொண்டு நற்றிணையில் எயினந்தை மகனார் இளங்கீரனார் பாடல்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்: தொல்காப்பியம், அகத்திணையியல், உவமவியல், சொல்லதிகாரம், நற்றிணை, பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை,**

**முன்னுரை**

இன்றும் என்றும் கன்னியாக இருக்கும் நம் தமிழ் மொழி இலக்கிய வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டது. நமக்கு முதலில் முமையாக கிடைத்த நூல் தொல்காப்பியம் ஆகும். இது இலக்கண வகையைச் சார்ந்தது. முதலில் கிடைத்த இலக்கியம் சங்க இலக்கியம் ஆகும். இவ்விலக்கியம் பாட்டும் தொகையும் என இரு பிரிவுகளாக பகுக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் எட்டுத்தொகையில் முதலில் வைத்துப் போற்றப்படும் நூல் நற்றிணை ஆகும். நற்றிணை நானூறு பாடல்களைக் கொண்டது. நூற்றெழுபத்தைந்து புலவர்கள் பாடியுள்ளனர்.நல் என்னும் அடைமொழியைக் பெற்ற நூல் நற்றிணையாகும். திணை என்ற பெயரிலேயே இந்நூல் வழங்கப்படுகிறது. அகப் பொருள்களைப் பற்றி மட்டுமே பேசக்கூடிய இப்பனுவல் பல்வேறு சங்கப் புலவர்கள் பாடிய தொகுப்பாகும். இந்நூலைத் தொகுப்பித்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி; தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. அகப்பொருள் நுட்பங்கள் மிகச் செறிவாக புகுத்தப்பட்டு சான்றோர் பெருமக்கள்

செய்யுள்களை யாத்துள்ளனர். அவர்களுள் ஒருவரான எயினந்தை மகன் இளங்கீரனார் பாடல்களில் காணப்படும் பொருட்புலப்பாட்டு உத்திகளையும் நுட்பங்களையும் இக்கட்டுரை விரிவாக ஆராயவுள்ளது.

**பொருட்புலம்**

செம்மொழியாம் நம் தமிழ் மொழியானது மிகவும் பழமையான இலக்கண இலக்கியங்களைக் கொண்டுள்ளது. பண்டைய இலக்கியம் அகம் புறம் என இருப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இவ்விலக்கியத்தில் பொருட்புலம் என்பது கருத்துச் செறிவிற்காக பிணைக்கப்பட்டுள்ளது. உறவுமுறை, சிற்பம், தாவரம், விலங்குகள், மதம், சடங்குகள், அணிகலன்கள், ஆடை, குடியிருப்பு, புழங்குப்பொருட்கள், அரசியல், உணவுவகை, சிற்பம், கட்டிடம், பருவநிலைகள், செய்தித்தொடர்பு, வணிகம், போரத்தொழில், பொழுது போக்குகள், நிறங்கள், அளவைகள், விழாக்கள், சடங்குகள் முதலியவற்றை பொருட்புலத்துள் அடக்கலாம். **'முதல் கரு வுரிப் பொருள் என்ற மூன்றே நுவலுங்காலை முறை சிறந்தனவே'1(தொல்.அக.4)** என தொல்காப்பியர் பொருட்புலத்தைச் சுட்டுகிறார். பொருட்புலம் என்பது உலகம் தம்மை தகவமைத்துக் கொண்டதாகும். இத்தகவமைப்பு உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது. பொருட்புலச் சொற்கள் மாந்தர்களின் உணர்வுகளை விளக்குவதற்காக எழுந்ததாகும். **'உவமந்தானும் பொருட்புலட்பாடே' (தொல்.உவ.இய.பக்.276) என நச்சர் உரைப் பகருகிறார்**. இப்புலச்சொற்கள் கருத்துப் பொருள், குறிப்புப் பொருள், பயன் பாட்டெல்லை என மூன்று வகைகளில் ஆளப்படுகிறது என்று பேராசிரியர் த.இளஞ்செழியன் குறிப்பிடுகிறார். மேலும் ஒரு புலத்தின் கீழ் அடங்கும் சொற்கள் தம்முள் உறவு கொண்டவை எனவும் கூறுகிறார். பொருட்புல உறவு என்பது மீச்சொல் என்றும் அதனுள் உள்ளடங்கு சிறப்புச் சொற்களை உட்சொல் என்றும் லீச் கூறுவதாகவும் எடுத்துக்காட்டுகிறார். பொருட்புலங்கள் தம்முள் உறவு கொண்டிருப்பதோடு மட்டுமல்லாது பொருள் விரிவுப் பெற்று பிற புலங்களுடனும் தொடர்புக் கொள்ளும். அதை தொல்காப்பியர் திணை மயக்கமாக **'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' (தொல்.அக.15)** என்று கூறுகிறார். முதற்பொருளும் கருப்பொருளும் பொருள் விரிவுக்காக பிற திணைப்புலங்களோடு தொடர்புக் கொள்ளும். திணையின் ஒழுக்கமாகிய உரிப்பொருள் தத்தம் திணையின் அளவிலேயே நிற்கும். இதை பயன்பாட்டெல்லை என வகைப்படுத்தலாம். ஆனால் முதற்பொருளும் கருப்பொருளும் கருத்துப் பொருளாகவும் குறிப்புப் பொருளாகவும் இலக்கியங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

**எயினந்தை மகனார் இளங்கீரனார் பாடல்களில் பொருட்புலப்பாடு**.

எயினந்தை மகனார் இளங்கீரனார் பாடல்களில் பொருட்புலபாடு எனும் பொருண்மையில் இக்கட்டுரை ஆராய்கிறது. இவர் நற்றிணையில் 113,269,306,346 ஆகிய நான்கு பாடல்களைப் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள இந்நான்கு பாடல்களும் கற்பு காலத்தில் நிகழக்கூடிய வாழ்வியலை எடுத்தியம்புவனவாக அமைகின்றன. இந்நான்கு பாடல்களிலும் பலவிதமான பொருட்புலப்பாட்டு கூறுகள் அமையப்பெற்றள்ளன. அவை பின்வருமாறு:

1. **இசை வழி பொருட்புலப்பாடு**
2. **போர் வழி பொருட்புலப்பாடு**

**3. பருவம் வழி பொருடட் புலப்பாடு**

**4. புழங்குப்பொருட்கள் வழி பொருட்புலப்பாடு**

**5. அணிகலன்கள் வழி பொருட் புலப்பாடு**

**6. விலங்குள் வழி பொருட்புலப்பாடு**

**7. உறவுமுறைகள் வழி பொருட்புலப்பாடு**

ஆகியவற்றை பொருட்புலங்களை வகைப்படுத்தி இக்கட்டுரையின் ஆய்வுக் கூறுகளாக கொள்ளலாம்.

**இசை வழி பொருட்புலப்பாடு**

இசை என்பது ஒழுங்குப்படுத்தப்பட்ட ஓசையாகும். இசைக் கருவிகளும் இசையும் தமிழர் பண்பாட்டில் ஒரு தவிர்க்கமுடியாத கூறுகாளக அமைந்துள்ளன. இசை தமிழர்களின் வாழ்வியலில் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என அனைத்து நிலைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வகையில் சங்ககால மக்களின் பண்பாட்டை எடுத்தியம்பும் அக நூல்களில் ஒன்றான நற்றினையில் இசைக்கருவி, இசை வழி பொருட்புலப்பாடடை எடுத்தியம்பும் வகை அமைந்துள்ளது. நற்றிணைத் தலைவன் கற்பு காலத்தில் பொருன்வயின் காரணமாக பிரிந்து செல்ல நேர்கிறது. அப்பொழுது இடச்சுரத்து ஆற்றதவனாய் தலைவியின் நிலையை நினைந்து வருந்துவதை இசை வழி பொருட்புலப்பாட்டு நிலையில் ஆசிரியர்

**“உதியன் மண்டிய ஒலித்தலை ஞாட்பின்**
**இம்மென் பெருங்களத்து இயவர் ஊதும்**
**ஆம்பலங் குழலின் ஏங்கிக்**
**கலைஞர் உறுவோள் புலம்பொள் நோக்கே” (நற்.113:9-12)**

என்ற வரிகளில் தலைவியன் துன்பத்தைப் புலப்படுத்துகிறார். அதாவது சேர மன்னான உதியஞ்சேரல் சினந்து சென்று போர் செய்கின்ற போர்களத்தின் கண்ணே களம்பாடுநர் வாத்தியத்தில் விரைவாக ஊதுகின்ற ஆம்பல் என்னும்; பண்ணையுடைய புல்லாங்குழல் இசையெடுத்தாற்போல தலைவி வாய்விட்டு அழுதாள். தலைவனைப் பிரிந்த தலைவியின் துன்ப நிலையை உணரத்த ஆசிரியர் புல்லாங்குழல் ஆம்பற்பண் வழி பொருட்புலப்பாட்டினை புலப்படுத்துகிறார். **“ஆம்பல் பண் என்பது தட்டை, தன்னுமை போன்ற இசைக்கருவிகளுடன் இசைக்கப்படும இசையாகும்”.** இப்பண் நற்றிணை மட்டுமல்லாது ஐங்குநுறூறு, குறிஞ்சிப்பாட்டு போன்ற சங்க நூல்களிலிலும் குறிக்கப்பட்டுள்ளது. இப்பண் மாலை மற்றும் முன்னிரவு நேரங்களில் முல்லை நிலத்தில் ஏக்க உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்காக இசைப்படும் பண் ஆகும். ஆதலால் தலைவி தலைவன் தன்னைப் பிரிகிறான் என்னும் ஆற்றாமையினால் அழுவதை புல்லாங்குழலிலிருந்து வரும் ஆம்பண் பண்ணைக் கொண்டு ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

**பருவம் வழி பொருட்புலப்பாடு**

அக இலக்கியத்தில் பருவங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. திணையும் பொழுதும் பின்னிப் பிணைந்தவை. பொருட்புலத்துள் காலத்தைக்குறிக்கும் தொல்காப்பியர் **‘முதலெனப்படுவது நிலமும் பொழுதும்’(தொல்.அக.4)** எனக் குறிக்கிறார். பருவங்கள் கார்காலம், கூதிர் காலம்,

முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறுகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. பொழுதுகள் குறிப்பால் உணர்த்தப்படுகின்றனவே அன்றி நேரடியாக சுட்டப்பெறுபவை சிறுபாண்மையே.

தலைவன் கற்பொழுக்கத்தில் பொருள்வயின் காரணமாக தலைவியைப் பிரியக் கருதுகிறான். அவ்வாறு பிரிந்தால் தலைவியினது மேனி நலன் குன்றி பசலைநோயல் துன்பப்படுவாள் என இடைச்சுரத்து ஆற்றதவனாய் தன் நெஞ்சிற்கு

**"உழையணந்து உண்ட இறைவாங்கு உயர்ச்சினைப்**

**புல்லரை இரத்திப் பொதிப்புறப் பசுங்காய்" (நற்.113:1-2)**

எனக் கூறுகிறான். இதில் தலைவியின் நலனுக்கு இரத்தி மரத்தின் காய்களைக் குறிக்கப்பட்டுள்ளது. இக்காய்கள் பின்பனிக் காலத்தில் விளையக்கூடியது ஆகும். இதன் மூலம் பாலைநிலத்துக்குரிய பின்பனிப் பருவம் குறிக்கப்பட்டுள்ளது. **'பின்பனி தானும் உரித்தென மொழிப' (தொல்.அக.12)** எனப் பின்பனிக்காலத்தை பாலைநிலத்திற்குரிய பெரும்பொழுதாக தொல்காப்பியர் சுட்டுகிறார். பிரிவுத்துயரை உணர்த்தச் கூடிய காலமாக பின்பனியும் உள்ளது. இரத்திமரத்தின் பசுங்காய்கள் வழி ஆசிரியர் பின்பனிக் காலத்தைப் புலப்படுத்துகிறார். மேலும் கார்காலமும் குறிக்கப்பட்டுள்ளது.

**"குணக்கடல் முகந்து குடக்கோர்பு இருளித்**

**தண்கார் தலைஇய நிலந்தணி காலை" (நற்.346:1-2)**

என்ற அடிகள் கார்காலத்தைப் புலப்படுத்துகின்றன. அதாவது தமிழகத்திற்குப் பருவமழை நல்க கூடிய தென்கிழக்கு பருவக்காற்றானது **"மேற்கு திசையை நோக்கி மழையைப் பொழிந்து வெப்பம் தணித்த காலத்தில் இற்கிழத்தியைப் பிரியக் கருதிய தலைவன் கார்காலத்தில் ஒரு சிற்றூர் கண் தங்க நேர்ந்த பொழுது கார்காலம் வந்தது என்பதை குறிப்பதாக ஔவை துரைசாமிப்பிள்ளைக் கூறுகிறார்."** இதனால் திணைமயக்கத்தின் படி கார்காலமானது பாலை திணையில் பருவம் வழி பொருட்புலமாக குறிக்கப்படுகிறது.

**அணிகலன்கள் வழி பொருட்புலப்பாடு**

பண்டைய காலந்தொட்டே தமிழ்ப்பண்பாட்டில் அணிகலன்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறன்றன. ஆண்களும் பெண்களும் அணிகல்கன்களைப் பூண்டது பல்வேறு இலக்கியங்கியங்களில் கூறப்பட்டுள்ளது. **"பெண்கள் அணிகன்களைப் பூணுவது தமது உடலை மறைப்பதற்காக என மயிலை சீனி வேங்கடசாமி பழங்காலத்து அணிகலன்கள் என்னும் கட்டுரையில் குறிப்பிடுகிறார்".** ஆண்களுக்கும் பெண்களுக்கும் இக்காலத்தைப் போலவே பழங்காலத்திலும் தனி தனி அணிகலன்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. சிலப்பதிகார கடலாடுகாதையில் மாதவி அணிந்துகொள்ளும் அணிகலன்கள் எண்ணிலடங்காதவை. இளங்கீரனார் தாம் பாடிய நான்கு பாடல்களுள் வாயில் மறுக்கும் பாடலும் ஒன்று. நற்றிணைத் தலைவன் ஒருவன் பரத்தையற் பிரிவு மேற்கொண்டு மீண்டபோது தலைவியின் மனக்குறிப்பறிந்து தோழிவாயில் மறுக்கிறாள். ஒருகாலத்தில் அணிகலன்களை அணிந்த தன்னுடைய புதல்வன் தலைவனது மார்பில் ஏறி விளையாடும் போது அவனது மார்பில் இருந்த மாலை அறுபட்டது; அம்மார்பிலிருந்து வீசிய ஒளியால் தலைவிக்கு புலவிக்குறிப்பு ஏற்பட்டது. இதை

**“குரும்பை மணிப்பூண் பெருங்செங் கிண்கிணிப்**
**பாலார்துவர்வாய்ப் பைம்பூண் புதல்வன்**
**மாலைக்கட்டின் மார்பூர்பு இழிய” (நற்.269:1-3)**

எனத் தோழி கூறுகிறாள். குரும்பைப் போன்ற மணிகளைக் கோர்த்த பூணாகிய அணிகலனும் பாதத்தில் அணியக்கூடிய கிண்கிணி என்ற அணிகலனும் அணிந்த புதல்வன் தலைவனது மார்பில் அணிந்திருக்கும் மாலையை அறுப்பதனால் தலைவிக்கு உண்டாகும் புலவிக்குறிப்பைத் தூண்டுவதற்கான தூண்டலாக புதல்வன் செயல்படுகிறான் என ஆசிரியர் பொருளைப் புலப்படுத்துகிறார். **‘மணிப்பூண் என்பது அரையிற்கட்டும் கிண்கிணி’ என பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் ‘மணிப்பூண் என்பது சிறுவருக்கு கழுத்திலும் இடையலும் அணியம் அணிகலன்’என ஔவை துரைசாமிப்பிள்ளையும் உரைப் பகருகின்றனர். “அரைஞாண் என்பது அமைச்சர்களும் செல்வர்களும் அரையிற் பொன்னார் தரிக்கும் திரட்சியான ஒரு கொடியாகும். இப்பொற்கொடியை பூணும் வழக்கம் இன்றும் பல தனக்காரர்கள் பூணுகின்றனர் என முனைவர் ந.அமுதாதேவி இலக்கியஙகளில் சிற்றணிகள் என்ற கட்டுரையில் கூறியுள்ளார”.** கிண்கிணி என்னும் அணிகலன் பாதத்தில் அணியும் அணிகலன் ஆகும். இவ்வணிகளனைப் பற்றி **மயிலை சீனி வேங்கடசாமி காலில் அணியும் சிலம்பிற்கு மேல் அணியும் அணிகலன் என்று குறிப்பிடுகிறார்.** இவ்வகையில் நோக்குகையில் தலைவன் செல்வச் செழிப்பள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பது புலனாகிறது.

**புழங்குப் பொருட்கள் வழி பொருட்புலப்பாடு**

ஒரு பண்பாட்டில் இடம் பெறுவன அப்பண்பாட்டுச் சூழலில் பயன்படுத்தப்பெறும் அனைத்துப் பொருட்களும் ஆகும். இன்று அரிக்கமேடு,கிழடி போன்ற அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த பானை ஓடுகள் முதன்மைப்படுத்தப்படுகின்றன. புழங்குப் பொருட்கள் பண்பாட்டின் குறியீடாகவும் அமைகின்றன. வீட்டுப் பயன்பாடு முதல் ஈமகிரியைகள் வரை மண் பானைகள் பயன்படுத்தப்படுகின்றன. **“அகன்பொழி ஈமத்தாழி;அகலிது ஆக வகைமர்நனந்தலை மூதூர் கலஞ்செய் கோவே” (புறம்:256:5-7)**என முதுமக்கள் தா்ழியையும் அதை செய்யும் குயவனையும் ஒரு புலவர் புறநானூற்றில் பாடுகிறார். இவ்வகையில் எயினந்தை மகனார் இளங்கீரனார் ஒரு நற்றிணைப்பாடலில் கற்பொழுக்கத்தில் பொருள்வயின் பிரிந்த தலைவன் தாம் தலைவியைப் பிரிந்து சென்றால் அவள் வருந்துவாள் என தலைவன் தன்னுடைய நெஞ்சிற்கு கூறி செலவழுங்குகிறான். மண்ணாற் செய்யப்பட்ட ஈரங்காயாத பசுமட்கலம் ஒன்றில் பெரிய மழைநீரை ஏந்த வைத்தால் அஃது அந்நீரோடு வேறுபாடின்றி கரைந்தொழியுமன்றே. அதுபோல பிரியக் கருதிய எனது நெஞ்கம் தலைவியுடன் ஒன்று பட்டுக் கரைந்து வேறுபாடின்றி ஆனது என்பதை

**“ஈர்மண் செய்கை நீர்படு பசுங்கலம்**
**பெருமழைப் பெயற்கேற் றாங்கெம்**
**பொருண்மலி நெஞ்கம் புணர்ந்து வந்தன்றே” (நற்.308:9-11)**

என்ற அடிகளில் ஆசிரியர் புலப்படுத்துகிறார். இதில் பசுங்கலம் என பானை குறிக்கப்படுள்ளது. சூளைக்குச் செல்லாத: நெருப்பில் சுடப்பெறாத பானையில் நீரை ஏற்றினால் அந்நீரோடு அக்கலனும்

கரைந்து வேறுபாடின்றி ஒன்றாக ஆகிவிடும். அது போல நான் செலவழுங்க வேண்டும் என்னும் தலைவிஎண்ணினாள். அவளது எண்ணத்தோடு தலைவனது எண்ணமும் சேர்ந்து விட்டது என்ற இருவரின் மனமொத்தக் கருத்தை பசுமட்கலத்தின் வழி பொருளை ஆசிரியர் புலப்படுத்துகிறார்.

**விலங்குகள் வழி பொருட்புலப்பாடு**

பொருட்புலத்துள் ஒன்றாக விலங்குகள் வகைப்படுத்தப்படுகின்றன. திணையை குறிப்பால் அறிந்து கொள்ளவும் இறைச்சிப் பொருளில் குறிப்பை உணர்தவும் விலங்கினங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் சூழுலியலில் விலங்குகள் குறிப்பட்ட இடத்தைப் பெறுகின்றன. ஒவ்வொரு திணைக்கும் தனி தனியே விலங்குகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. நற்றிணைத் தலைவன் ஒருவன் கற்பொழுக்கத்தில் தலைவியைப் பிரிகிறான். அவன் பிரியும் போது இடைச்சுரத்து ஆற்றாதவனாய் தமது நெஞ்சிற்கு கூறுகிறுவதாக ஆசிரியர் ஒரு பாடலை அமைத்துள்ளார். அதில் தலைவன் தலைவனைப்பிரிந்தால் அவளது நலன் குன்றி பசலை நோயால் அவதியுறுவாள்; என்னும் கருத்தை,

**"உழையணந்து உண்ட இறைவாங்கு உயர்ச்சினைப்**
**புல்லறை இரத்திப் பொதிப்புறப் பசுங்காய்" (நற்.113:1-2)**

என்னும் அடிகளில் புலப்படுத்துகிறார். இதில் இதில் பொருட்புலமாக உழை என்னும் மான்வகை குறிக்கப்பட்டுள்ளது. பிரிவுத்துயரால் தலைவிக்குத் தோன்றும் பசலை நோயை உழை என்னும் மான் வழி ஆசிரியர் பொருளைப்புலப்படுத்துகிறார்.

**"யாடும் குதிரையும் நவ்வியும் உழையும்**
**ஓடும் புல்வாய் உள்பட மறியே" (தொல்.மர.556)**

என உழையை இளமைப் பெயர்களுள் ஒன்றாக தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உழை என்பதன் பொருளாக கலைமான், ஆண்மான் ஆகியவற்றை கழகத் தமிழகராதி கூறுகிறது.

**உறவுமுறைகள் வழி பொருட்புலப்பாடு**

குடும்ப அமைப்பில் உறவு முறைகள் என்பது தொன்று தொட்டு வழங்கிவரும் ஒன்றாகும். ஒவ்வொரு உறவு முறைக்கும் ஒவ்வொரு அறத்தை இச்சமுதாயம் வரையறுத்துள்ளது. **"குடும்பம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் அவர்களுடைய சமுதாய மரபு படி மணவாழ்வில் ஈடுபடும் நிலையில் மட்டுமே தோன்ற முடியும் என பத்தவசலபாரதி கூறுவதாக முனைவர் க.பாலதண்டாயும் கூறுகிறார்".(பழந்.இலக்.குடு.அறம். பக்.14)** குடும்பத்தின் தொடக்கமாக திருமணம் அமைகின்றது. திருமணத்திலிருந்தே பரந்துபட்ட உறவுமுறைகளை நாம் அடைகின்றோம். நம்முடைய சமுதாயம் தந்தைவழி, தாய்வழி என உறவுகளை வரையறுத்துள்ளது. சங்க இலக்கிய பாடல்களில் பல உறவுமுறைச் சொற்கள் காணப்படுகின்றன. மேற்கத்திய பண்பாட்டில் காணப்படும் குடும்ப அமைப்பு முறையில் காணப்படும் உறவுகளை விட நம் தமிழப்பண்பாட்டில் காணப்படும் குடும்ப அமைப்பு முறையில் உறவுமுறைகள் பெரிய வட்டாரத்தைக் கொண்டவை ஆகும். கற்பொழுக்கத்தில் தலைவன் பரத்தையர் பிரிவு மேற்கொண்டு மீளுகிறான். அப்பொழுது தலைவியின் மனநிலையை அறிந்து தோழி வாயில் மறுக்கிறாள். தூதாக வந்த வாயிலிடம் கடந்த காலத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்வைக் குறிப்பிடுகிறாள். அதில் தலைவி தலைவனையும் புதல்வனையும் முன்னிருத்தி செய்ததாக தோழி குறிப்பிடுகிறாள். இதை

**“குரும்பை மணிப்பூன் பெருஞ் செங் கிண்கிணிப்**

**பாலார் துவர்வாய்ப் பைம்பூண் புதல்வன”; (நற்.269:1-2)**

எனற அடிகள் புலப்படுத்துகின்றன. இதில் மணிப்பூண் மற்றும் கிண்கிணி என்ற அணிகலன்களை அணிந்த புதல்வன் தலைவனது மார்பில் ஏறி விளையாடும் போது தலைவன் மார்பிலிருந்த மாலை அறுந்து விழுகிறது. அதானால் ஒளிவீசும் தலைவனின் மார்பைக் கண்ட தலைவியிடம் புலவிக்கறிப்புத் தோன்றுகிறது. இதன் வாயிலாக ஒரு குடும்ப அமைப்பை ஆசிரியர் புலப்படுத்துகிறார். இக்குடும்ப அமைப்பில் தலைவன், தலைவி, புதல்வன் என்ற உறவுமுறைகள் பொருட்புலப்புலமாக வெளிப்படுகின்றன. இதன் வாயிலாக எரு குடும்ப அமைப்பில் தலைவன்,தலைவி,புதல்வன் ஆகிய உறவுகளை உள்ளடக்கியவையாக நாம் அறியமுடிகின்றது..

**போர் வழி பொருட்புலப்பாடு**

சங்க கால மக்களின் இரு கண்களாக விளங்கியவை காதலும் வீரமும் ஆகும். வீரத்தினை தங்களது உயிரினும் மேலாக கருதினார்கள். புறநானூற்றில் பாண்டியன் நெடுஞ்செழியன் தானே தமது வீரத்தை எடுத்துக்கூறும் நிலையையெல்லாம் பார்க்கிறோம். புறவாழ்விற்கென்று நம் இலக்கியத்தில் துறைகள் தனியே வகுக்கப்பட்டு புற இலக்கியங்கள் பாடப்பட்டுள்ளன. **“வினையே யாடவர்க் குயிரே என பாலைப்பாடிய பெருங்கடுங்கோ” (குறு.135:1)** ஆண்களுக்குரிய போர்தொழிலைப் பற்றி பாடியுள்ளார். போரை தமது உயிராகக் கருதிய மக்கள் போர் நிறைவடைந்த பிறகு போர்நடைப்பெற்ற இடம் எந்நிலைக்கு உள்ளாகி இருக்கும் என்பதை பதிவு செய்தவர்கள் சிறுபாண்மையே. போரை விளக்குவதற்காகவே எழுந்த சிற்றிலக்கியம் பரணியாகும் அவ்வகையில் கலிங்கத்துப்பரணி முதலாவது இடத்தில் வைத்துப் போற்றப்படுகிறது. இங்கு கற்பொழுக்கத்தில் பொருள்வயின் காரணமாக தலைவியைப் பிரிகிறான் நற்றிணைத் தலைவன்; போகும் வழியில் கார்காலம் வந்து வந்து விடுகிறது. ஆதலால் ஒரு சிற்றூரில் தங்க நேர்கிறது. இதை

**“அரசுபகை நுவலும் அருமுனை இயவின்**

**அழிந்த வேலி அம்குடிச் சீறூர்” (நற்.346:3-4)**

என்ற அடிகளில் ஆசிரியர் புலப்படுத்துகிறார். தலைவண் தங்கிய அச்சிற்றூர் முன்பு ஒரு காலத்தில் போர் நடைப்பெற்று அழிந்த இடமாகும். கற்பொழுக்கத்தில் தலைவியைப் பிரியும் தலைவன் பிரிவாற்றதவனாய் தமது நெஞ்சிற்கு பிரிவின் துயரத்தைக் கூறுகிறான். அதில் போர் நடைப்பெற்ற ஒரு இடமானது குடிகளழிந்த பகுதியாக மாறி மக்கள் வசிக்கும் இடத்திற்கு தகுதியற்றதாக ஆகிவிடும். போரால் அழிந்த இந்நிலத்தின் வழி தலைவனின் பிரிவுத்துயர் புலப்படும்படி ஆசிரியர் எடுத்துரைக்கிறார். போரின் கொடுமையை

**“விளைகனல் விழிகளின் முளைக்கவே**
**மினலொளி கனலிடை யெறிக்கவே**
**வளைசலை யுமென விடிக்கவே**
**வடிகணை நெடுமழை படைக்கவே” (கலி.பர.போர்.பாடி.409)**

என கலிங்கத்துப்பரணியில் சயங்கொண்டார் போர்பாடியது பகுதியில் பாடுகிறார்.

அகப்பாடல்களில் பொருட்புலங்கள் என்பது பெரும்பாலும் இயற்கையைச் சார்ந்ததாகவே இருக்கிறது. அகத்துறையோடு பிளைத்து சமூகக் கூறுகளும் சங்ககால வாழ்வியலை நமக்கு எடுத்துரக்கின்றன. பொட்புலங்கள் பாடலின் சூழலுக்கு ஏற்றாற் போல அமைக்கப்பட்டுள்ளதை எயினந்தைய மகனார் இளங்கீரனார் பாடல்களில் காண முடிகின்றது. இவது பாடல்கள் பாலைத்தினையைச் சார்ந்தவை. ஆகையால் பரிவுத்துயரை விளக்கும் வகையிலேயே பொருட்புலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

பொருட்புலங்கள் என்பது நாம் அன்றாடம் நடைமுறை மற்றும் சூழலில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் உயிரினங்கள் ஆகும். நற்றிணையில் எயினந்தையார் மகனார் இளங்கீரனார் பாடிய நான்கு பாடல்களுமே பாலைத்திணையைச் சார்ந்தவை ஆகும். பாலைத்திணையின் உரிப்பொருளான பிரிவு ஒழுக்கம் கூறக்கூடியவை. கற்பொழுக்கத்தை மட்டுமே பேசக்கூடியவை. பிரிவும், வாயில் மறுத்தலும், செலவழுங்குதல் ஆகியதுறைகளைக் கொண்டு அமைகின்றன. இவ்வகப்பாடல்களை ஆராய்ந்து நோக்கியதில் இசை, பருவங்கள், அணிகலன்கள், புழங்குப் பொருட்கள், விலங்குகள், உறவுமுறைகள், போர்ச்செய்திகள் ஆகியவை பொருட்புல உத்திகளாக எயினந்தை மகனார் இளங்கீரனார் கையாண்டிருப்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்:**

1. அரசு.வீ,பதிப்பாசிரியர்,மயிலைசீனி வேங்கடசாமி ஆய்வுக்களஞ்கியம், தமிழகக் கலை வரலாறு இசை-ஓவியம்-அணிகலன்கள், தமிழ்மண்பதிப்பகம், 2.சிங்காரவேலர் தெரு, தியாகராயர் நகர், சென்னை-27.
2. இளம்பூரனார் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1988.
3. இளஞ்செழியன்.த,சொற்பொருண்மை (பொருட்புல ஆய்வு), இமேஜ் ரூ இம்ப்ரஷன்,11/29, சுப்ரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை, 600 018, முதற்பதிப்பு, 2008.
4. ஔவை துரைசாமிப்பிள்ளை.சு,பூம்புகார் பதிப்பகம்,127,பிரகாசம் சாலை(பிராட்வே), சென்னை-600 108,முதற்பதிப்பு,2011.
5. கழகப் புலவர் குழுவினர்,கழகத் தமிழகராதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,522,டி.டி.கே.சாலை,ஆள்வார்பேட்டை,சென்னை-18,முதற்பதிப்பு,1952.
6. மாணிக்கவாசகன்.ஞா, உரை ஆசிரியர், புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை-600 001, ஐந்தாம் பதிப்பு-நவம்பர்,2010.
7. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.அ,நற்றிணை மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,522,டி.டி.கே.சாலை,ஆள்வார்பேட்டை,சென்னை-18,முதற்பதிப்பு,1952.
8. செந்தமிழ் அருவி பால தண்டாயுதம்.க,பழந்தமிழ் இலக்கியத்தில் குடும்பம் அறம், தமிழ்நெஞ்சம் பதிப்பகம்,59, rue.des,entrechats,95800cegy,France.